<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி.</u>

<u>அசல் வழக்கு எண். 55/2022</u>

பெயர் : தமிழ்தேவன் D.W.1. Cross

த/பெ. : சகாதேவன்

தேதி : 06.10.2025

சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

<u>குறுக்கு விசாரணை:</u> –

1. தாவா சொத்து சண்முகம் தகப்பனார் ரத்தினம் என்பவர் பெயரில் உள்ளது. ரத்தினம் என்பவருக்கு சண்முகம், ராசையன் ஆகியோர் வாரிசுகள் ஆவார்கள். அவர்கள் இருவர் மட்டும் தான் ரத்தினம் என்பவரின் சொத்துகளுக்கு வாரிசுதாரர்கள் என்றால் சரிதான். வாதிக்கும் எனக்கும் எப்போது கிரய ஒப்பந்தம் ஏற்பட்டது என்றால் 29.10.2017ல் ஏற்பட்டது. கிரய ஒப்பந்தம் ஏற்பட்ட தேதியிலிருந்து தாவா சொத்து எனது அனுபவத்தில் உள்ளது என்றால் சரிதான். கிரய ஒப்பந்தில் கால அவகாசம் எவ்வளவு காலம் நிர்ணயிக்கப்பட்டது என்றால் அவ்வாறு காலம் நிர்ணயிக்கபடவில்லை.

2. கிரய ஆவணம் ஏற்படுத்திக்கொள்ள 31.03.2018 என நிர்ணயிக்கப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி கிரய ஒப்பந்தத்தை வாதி இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். 2017 ம் ஆண்டு முதல் 07.06.2022ம் தேதி வரை வாதி பிரதிவாதியிடம் நேரிலும், ஆட்கள் மூலமாகவும், தொலைபேசி மூலமாகவும் தொடர்பு கொண்டு கிரய பாக்கியை கொடுத்துவிட்டு கிரயம் செய்து கொள்ளும் படி பல முறை கேட்டார் என்றாலும், நான் பாக்கி கிரய தொகையை கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. கிரய ஒப்பந்தத்தில் குறிப்பிடபட்டுள்ள காலமான 31.03.2018 ற்குள் நான் கிரய பாக்கியை செலுத்தி கிரய செய்து கொள்ளாததால் மேற்படி கிரய ஒப்பந்தமானது காலாவதியாகிவிட்டது என்றால் சரியல்ல. மேற்படி கிரய ஒப்பந்தம் காலாவதியாவிட்டதால் நான் தாவா சொத்தை வாதியிடம் ஒப்படைக்க கடமைபட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

**வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**